**செய்தி வெளியீடு எண்: 297** **நாள்: 05.06.2013**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை இன்று (5.6.2013) தலைமைச் செயலகத்தில், கடத்தப்பட்டு மீட்கப்பட்ட லண்டனில் வாழும் இலங்கைத் தொழிலதிபர் திரு கணபதி பிள்ளை தவராஜா மற்றும் அவரது மனைவி திருமதி ஜலஜா ஆகியோர் சந்தித்து, தங்களை பத்திரமாக மீட்டெடுக்க நடவடிக்கை எடுத்தமைக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கண்ணீர் மல்க நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இங்கிலாந்து நாட்டு குடியுரிமை பெற்று லண்டனில் வசித்து வரும் இலங்கைத் தமிழரான திரு கணபதி பிள்ளை தவராஜா மற்றும் அவரது மனைவி திருமதி ஜலஜா 29.5.2013 அன்று சென்னை விமான நிலையத்தில் வந்து இறங்கியபோது, சிலரால் கடத்தப்பட்டனர். இவர்களைக் கடத்திய கடத்தல்காரர்கள், லண்டனில் உள்ள திரு கணபதி பிள்ளை தவராஜாவின் மகள் தர்ஷினியை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, திரு தவராஜா மற்றும் திருமதி ஜலஜாவை தாங்கள் கடத்தி வைத்திருப்பதாகவும், 2 ¾ கோடி ரூபாய் கொடுத்தால் அவர்களை உயிரோடு விட்டுவிடுவதாகவும், இதற்கு மாறாக காவல் துறையை அணுகினால் பெற்றோர்களின் பிணங்கள் தான் கிடைக்கும் என்றும் மிரட்டியுள்ளனர்.

இந்தத் தகவல் கிடைக்கப் பெற்றவுடன், சென்னை காவல் துறையினர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவின்படி கடத்தல்காரர்களைப் பிடிக்கும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டனர். கடத்தல்காரர்கள் தவராஜாவின் மகள் தர்ஷினியுடன் கைபேசியில் பேசியதை வைத்து கடத்தல்காரர்கள் கடலூர் மாவட்டம் நெய்வேலியில் உள்ள மந்தாரக்குப்பத்தில் லண்டன் வாழ் இலங்கை தம்பதியரை கடத்தி வைத்துள்ளது காவல் துறையினருக்கு தெரிய வந்தது. இதனையடுத்து, காவல் துறையின் சார்பில் அமைக்கப்பட்ட எட்டு தனிப்படைகளில், காவல் துறை கூடுதல் ஆணையர்

திரு தாமரைக்கண்ணன் மற்றும் இணை ஆணையர் திரு. சண்முகவேல் ஆகியோர் தலைமையில் அமைக்கப்பட்ட தனிப்படையினர் 1.6.2013 அன்று கடலூர் விரைந்து சென்று கடத்தல்காரர்களைப் பிடித்து, கடத்தப்பட்ட தம்பதியினரை மீட்டனர். கடத்தல்காரர்களில் திரு சத்யா என்பவரைத் தவிர அனைவரும் கைது செய்யப்பட்டு சென்னைக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர்.

கடத்தல் கும்பலால் கடத்தப்பட்டு காவல்துறையினரால் விரைந்து மீட்கப்பட்ட லண்டனில் வாழும் இலங்கைத் தொழிலதிபர் திரு கணபதி பிள்ளை தவராஜா மற்றும் அவரது மனைவி திருமதி ஜலஜா ஆகியோர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை இன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்து தாங்கள் கடத்தப்பட்டதை அறிந்து விரைந்து நடவடிக்கை எடுக்க காவல் துறையினருக்கு உத்தரவிட்டு தங்களை மீட்டமைக்காக கண்ணீர் மல்க தங்களது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

அப்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கடத்தல் கும்பலால் கடத்தப்பட்டு மீட்கப்பட்ட லண்டனில் வாழும் இலங்கைத் தொழிலதிபர் திரு கணபதி பிள்ளை தவராஜா மற்றும் அவரது மனைவி திருமதி ஜலஜா ஆகியோருக்கு தனது நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்கள். மேலும் தம்பதியினரை மீட்டெடுக்க உதவிய காவல் துறையினரை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்

“I have always maintained that the Tamil Nadu Police is the best Police Force in the whole of India and equal to London’s Scotland Yard and you have proved it now by your performance. Congratulations. We are all very proud of you.” என்று பாராட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், லண்டன் வாழ் இலங்கை தம்பதியரை மீட்கும் இந்த நடவடிக்கையில் ஈடுபட்ட சென்னை மாநகர காவல்துறை ஆணையர் திரு எஸ். ஜார்ஜ், இ.கா.ப., சென்னை

மாநகர காவல்துறை கூடுதல் ஆணையர் (வடக்கு) திரு பி. தாமரைக்கண்ணன், இ.கா.ப., காவல்துறை தலைவர் (நுண்ணறிவு) திரு அமரேஷ் புஜாரி, இ.கா.ப., காவல்துறை இணை ஆணையர் (நுண்ணறிவு) திரு வி. வரதராஜு, இ,கா.ப., காவல்துறை இணை ஆணையர் (மேற்கு) திரு கே. சண்முகவேல், இ.கா.ப., காவல்துறை துணை ஆணையர் (அண்ணா நகர்) திரு எஸ். சேவியர் தனராஜ், இ.கா.ப., காவல்துறை துணை ஆணையர் (புனித தோமையர் மலை) திரு பி. சரவணன், காவல்துறை கூடுதல் துணை ஆணையர் திரு எஸ். ஜெயகுமார் மற்றும் காவல்துறை உதவி ஆணையர் (கோயம்பேடு) திரு எஸ். செந்தில்குமரன் ஆகியோருக்கு தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்கள்.

* * * * * * *

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**